www.prepp.in

Your Personal Exams Guide

**LI**

TNPSC - SPECIMEN

பதிவு எண் / Register No.

# 2018

## சட்டத் தாள் I

## LAW PAPER I

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி

Duration : 3 Hours

மொத்த மதிப்பெண்கள் : 100

Max. Marks : 100

SEAL

*விண்ணப்பதாரர்களுக்கான பொது குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) பிரிவுகள் அ, ஆ மற்றும் இ–யில் முறையே ஆறு கேள்விகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தலா 5 மதிப்பெண் கொண்டது.

Sections A, B and C have 6 questions each and the candidates shall answer 5 questions each from each of these sections. Each question in these sections carry 5 marks each.

ii) பிரிவு ஈ–யில் இரண்டு கேள்விகள் தரப்பட்டுள்ளன. இரண்டிற்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தலா 10 மதிப்பெண் கொண்டது.

Section D contains 2 questions and both the questions should be answered. Each question in this section carries 10 marks.

www.prepp.in

iii) பிரிவு உ–வில் ஒரு கேள்வி தரப்பட்டுள்ளது. அந்த கேள்வி 5 மதிப்பெண் கொண்டது.

Section E contains 1 question and it carries 5 marks.

iv) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே. இருப்பினும் விண்ணப்பதாரர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e. the court name, place, case numbers, names of parties etc., found in the questions are fictional and may not be true in the real and legal sense. Yet candidates have to conclusively assume them to be true for the purposes of solving the questions.

v) விண்ணப்பதாரர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலும், தமிழிலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

vi) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில தரப்பில் தரப்பட்டுள்ள வடிவே முடிவானது.

The question paper is printed in Tamil and English versions. In all matters and the cases of doubt English version is final.

TNPSC - SPECIMEN

www.prepp.in

Your Personal Exams Guide

## சட்டத் தாள் I

## LAW PAPER I

### பிரிவு அ — (5 × 5 = 25)

### SECTION A — (5 × 5 = 25)

### உரிமையியல் வழக்கு விசாரணைமுறைச் சட்டம்

### CODE OF CIVIL PROCEDURE

1. அரவிந்த் பொன்னேரியில் உள்ள சில சொத்துக்கள் குறித்து பாலு என்பவருக்கு கிரயப்பத்திரம் எழுதியுள்ளார். அந்த சொத்துக்களில் தனக்கு பாகம் உள்ளதாக கோரி அரவிந்தின் மகன் சந்திரன், பொன்னேரி சார்பதிவாளருக்கு எதிராக அவர், அரவிந்த் பாலுவிற்க்கு எழுதி கொடுத்த கிரயப்பத்திரத்தை பதிவு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பொன்னேரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். உரிமையியல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதா என்பதனை தக்க காரணங்களுடன் விவாதிக்கவும்.

   A sale deed was executed by Aravind in favour of Balu with respect to certain properties in Ponneri. Claiming share in the said properties Chandran s/o Aravind filed a suit seeking Permanent Injunction restraining the Sub Registrar, Ponneri from registering the sale deed executed by Aravind in favour of Balu before the District Munsif Ponneri. Discuss with reasons about the maintainability of the Suit before the civil court.

TNPSC - SPECIMEN

2. முன் தீர்ப்புத்தடை கோட்பாடு ஒரே வழக்கின் இருவேறு (two stages) நிலைகளில் பொருந்துமா – சுருக்கமாக விவாதிக்கவும்.

   Do the principles of Res judicata apply between two stages in the same litigation — Discuss briefly.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

3. ஒரு வழக்கில் விசாரணை நீதிமன்றம், பிரதிவாதி எதிரிடை அனுபோக பாத்தியதை குறித்து வாதம் எழுப்பியிருந்தும், அதனை கருத்தில் கொள்ளாமலும், பரிசீலிக்காமலும், சொத்துக்கள் குறித்து உரிமை விளம்புகை மற்றும் சுவாதின மீட்பு பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பித்தது. தீர்ப்பாணை பெறுநர்/வாதி தாக்கல் செய்த நிறைவேற்றுகை மனுவில், தீர்ப்புக் கடனாளி/பிரதிவாதி, தனது எதிரிடை அனுபோக பாத்தியதை குறித்த வாதத்தை கருத்தில் கொள்ளாமல் பிறப்பித்த தீர்ப்பாணை நிறைவேற்றத்தக்கது அல்ல என்றும் அது முற்றிலும் இல்லா நிலையது என்றும் குறிப்பிட்டு உரிமையியல் வழக்கு விசாரணை முறைச் சட்டம், 1908, பிரிவு 47–ன் கீழ் மனுதாக்கல் செய்தார். மேலும், அவர் கிஸ்து இரசீதுகள் மற்றும் பட்டா தனக்கு ஆதரவாக தாக்கல் செய்தார். தீர்ப்புக் கடனாளி/பிரதிவாதியின் இந்த வாதமானது நிலைக்கத்தக்கதா? உங்கள் பதிலை தகுந்த காரணங்களுடன் விவரிக்கவும்.

A suit for declaration of title and for recovery of possession of immovable properties was filed and the same was decreed by the trial court without considering and going into the plea of adverse possession raised by the defendant. In the Execution petition filed by the plaintiff/decree holder, the defendant/Judgment debtor filed an application under Sec. 47 Code of Civil Procedure, 1908, stating that the decree is not executable and perse void for the reason that his defense of adverse possession was not considered. He also filed Kist receipts and patta in his favour. Would the claim of the defendant/Judgment Debtor be sustainable? Elaborate your answer with reasons.

TNPSC - SPECIMEN

4. பொதுமக்களை பாதிக்கும் பொதுத்தொல்லைக்கு எதிராக யார் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம்? உரிமையியல் வழக்கு விசாரணை முறைச் சட்டம் 1908–ன் பொருத்தமான பிரிவுகளை மேற்கோள்காட்டி விவாதிக்கவும்.

For action against Public nuisance - who can initiate proceedings before the Civil Court? Discuss quoting the relevant provisions in the Code of Civil Procedure, 1908.

5. ஒரு நிறைவேற்றுகை மனு விசாரணையில் தீர்ப்புக் கடனாளி/பிரதிவாதி முன்னிலை ஆகாததால், அவர் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்திரவு பிறப்பித்த 35–து நாட்கள் கழித்து தீர்ப்புக் கடனாளி/பிரதிவாதி அந்த உத்தரவை இரத்து செய்யக்கோரும் மனுவும், அந்த மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து அந்த மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டி காலவரம்புச் சட்டம் 1963 பிரிவு 5–ன் கீழ் ஒரு மனுவும் தாக்கல் செய்தார். காலவரம்புச் சட்டம் 1963 பிரிவு 5–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிறைவேற்றுகை நீதிமன்றம் அனுமதிப்பது உகந்ததா என்பதை தக்க காரணங்களுடன் விவாதிக்கவும்.

In an Execution proceeding, the Judgment Debtor/Defendant was set exparte for non-appearance and order was passed. After 35 days of the order, the Judgment Debtor/Defendant filed an application to set aside the exparte order along with an application under Section 5 of the Limitation Act, 1963 to condone the delay in filing the set-aside application. Would the executing court be justified in allowing the petition filed under Section 5 of the Limitation Act, 1963? Discuss with reasons.

6. இடைத்தரப்பு உரிமை வழக்கு குறித்து உதாரணம் குறிப்பிட்டு விளக்கவும்.

Interpleader Suit — discuss giving illustration.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## பிரிவு ஆ — (5 × 5 = 25)

## SECTION B — (5 × 5 = 25)

## குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம்

## CODE OF CRIMINAL PROCEDURE

7. காவலறிக்கையின் பேரில் அல்லாமல் வேறுவிதமாக தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணை முறையை குறித்து சுருக்கமாக எடுத்துரைக்கவும்.

Briefly narrate the Procedure for trial of Warrant Cases instituted otherwise than on Police Report.

TNPSC - SPECIMEN

8. எதிரி தனக்கு அமைதி காக்க உரிமை உள்ளது என்றும் தன்னை காவல் துறையினரின் பாதுகாவலில் அனுப்பினாலும், தான் எந்த தகவலும் வெளிப்படுத்த முடியாது என்றும் கோரும் போது, ஒரு நீதித்துறை நடுவர், எதிரியை காவல் துறையினரின் பாதுகாவலில் அனுப்ப உத்தரவிடலாமா? உமது பதிலை காரணங்களுடன் எடுத்துரைக்கவும்.

Whether a Magistrate could order police custody when the Accused pleads right of silence and alleges that no information would be disclosed by him in the police custody even if he is sent to police custody. Qualify your answer with reasons.

9. நீதித்துறை நடுவர் முன்னிலையில் நடந்து வரும் வழக்கு விசாரணையின் போது, சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடிய குற்றங்களும் அவ்வழக்கில் எதிரி புரிந்துள்ளார் என தெரியவரும் நிலையில், அந்த நீதித்துறை நடுவர் எடுக்க வேண்டிய நடைமுறை யாது என தக்க சட்டப்பிரிவை குறிப்பிட்டு விளக்குக.

During the course of trial before a Magistrate, from the deposition of the witnesses it is revealed that offences triable by Court of Sessions has also been committed by the accused. What is the course to be adopted by the Magistrate? Explain with relevant section.

10. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 357A–வின் கீழ், பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு வழங்குதல் குறித்து நீதிமன்றத்திற்கு உள்ள காட்சியப் பரப்பு (scope) மற்றும் அதிகாரம் குறித்து விவாதிக்கவும்.

Discuss the scope and powers of Court under Sec. 357A Code of Criminal Procedure, towards Victim Compensation.

www.prepp.in

Your Personal Exams Guide

11. குற்றவியல் நடுவர் ஆலந்தூர் அவர்களால், குமார் என்பவர் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு பிரிவு 326 இதச மற்றும் 506(II)-இதச பிரிவுகளின் கீழான குற்றங்களுக்கு முறையே மூன்று வருடம் கடுங்காவல் தண்டனையும், இரண்டு வருடம் சாதாரண சிறை தண்டனையும், அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. தண்டனையானது ஒன்று கழிந்த பின் மற்றொன்று தொடங்குதல் வேண்டும் என்றும் இரண்டு வருட சாதாரண சிறைதண்டனை கழிந்த பின்பு மூன்று வருட கடுங்காவல் தண்டனை தொடங்க வேண்டும் என்று நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு, தண்டனைகளில் எந்த தண்டனை முதலில் அனுபவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்ல நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதா? தகுந்த சட்ட பிரிவுகள் மேற்கோள்காட்டி விளக்குக.

Kumar is convicted for offences under section 326 Indian Penal Code and 506(II) Indian Penal Code and sentenced to undergo three years rigorous imprisonment and 2 years Simple Imprisonment respectively by the Judicial Magistrate, Alandur. The court directed that the sentences should run consecutively and the sentence of rigorous imprisonment for 3 years should follow the sentence of simple imprisonment for 2 years. Does the court have power to specifically indicate as to which of the sentences would commence first. Explain by citing the relevant section.

12. எதிரி ஒரு வருடம் சாதாரண சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், ரூ. 50,000 குற்ற முறையீட்டாளருக்கு நஷ்டஈடாக செலுத்த வேண்டும் என்றும், அது தவறும் பட்சத்தில் 3 மாத சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. எதிரி நஷ்டஈடு செலுத்தவில்லை, எனவே அதற்கான காவல்/தவறுகை தண்டனையை (Default Sentence) அனுபவித்தார். அதன் பிறகும் எதிரி நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவரா? குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973ன் கீழ் தகுந்த பிரிவுகளை மேற்கோள்காட்டி காரணங்களுடன் விளக்குக.

The accused was sentenced to simple imprisonment for 1 year and was also directed to pay compensation of Rs. 50,000/- to the defacto complainant and in default to undergo imprisonment for 3 months. The accused did not pay the compensation and he under-went the default sentence also. Would the accused still be liable to pay compensation. Give your reasons with reference to the relevant provisions of the Code of Criminal Procedure, 1973.

TNPSC - SPECIMEN

## பிரிவு இ — (5 × 5 = 25)

## SECTION C — (5 × 5 = 25)

## இந்திய சாட்சியச் சட்டம்

## INDIAN EVIDENCE ACT

13. ஒரு சாட்சியோ அல்லது அவரது வழக்கறிஞரோ, நீதிமன்றத்தால் சாட்சியிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி வழக்கிற்கு தொடர்பற்றது என எதிர்ப்பு தெரிவிக்க முடியுமா? இந்திய சாட்சிய சட்டம், 1872ன் தகுந்த பிரிவுகளை மேற்கோள்காட்டி விரிவான பதில் அளிக்கவும்.

Can a Witness or his Counsel object to the questions asked by the Court to the witness on the ground that it is irrelevant? Elaborate your answer citing the relevant provisions of Indian Evidence Act, 1872?

www.prepp.in

14. மின்னனு பதிவுருக்கள் தொடர்பாக இரண்டாம் நிலை சாட்சியம் சமர்பிக்க முடியுமா? அச்சான்றுகளை ஏற்றுக்கொள்வதற்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

Can secondary evidence be let in with respect to Electronic record. What precautions are to be taken before admitting such evidence?

15. அரசு தரப்பு சாட்சிகள் சிலர், தங்களது குறுக்கு விசாரணையின் போது, அன்றைய தினம் தாங்கள் நீதிமன்ற விசாரணைக்கு வரும் முன், அரசு வழக்கறிஞரால் நேர்காணல் செய்யப்பட்டதாக ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் காரணமாக அந்த சாட்சிகளின் நாணயத்தன்மை (credibility) குறையுமா? சுருக்கமாக விவாதிக்கவும்.

During cross examination of the prosecution witnesses, some of them admitted that they were interviewed by the Public Prosecutor on that day before trial. Whether the credibility of the witnesses, is impeached by the above admission. Discuss briefly.

16. முந்தைய வழக்கில் ஒருதரப்பினர் அளித்துள்ள ஏற்புரையை, அவருக்கு எதிராக பிந்தைய வழக்கில் ஏற்றுக்கொள்ள முடியுமா?

Whether an admission made by a party to the suit in an earlier proceedings, is admissible as against him in the subsequent proceedings?

17. சான்றொப்பம் இடப்படவேண்டும் என்று சட்டத்தால் கோரப்படும் பத்திரம் ஒன்றை, அந்த பத்திரத்தில் சான்றொப்பம் அளித்தவர் உயிருடன் இல்லாத நிலையில், எவ்வாறு மெய்பிக்க இயலும்?

How a document which requires attestation be proved when the Attestors are not alive?

TNPSC - SPECIMEN

18. ஒரு வழக்கு விசாரணையில், அ.ச.3 ஆனந்த் முதல் விசாரணை செய்யப்பட்டார். ஆனால் அவரிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. எனவே சாட்சியம் முடிக்கப்பட்டது. பின்னர் அ.ச.3-ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை மேற்கொள்ள ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு அனுமதிக்கப்பட்டது. அ.ச.3 ஆனந்துக்கு அனுப்பிய ஆஜர் நோட்டீஸ், அவர் உயிருடன் இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது. எனவே அவரை குறுக்கு விசாரணை செய்யமுடியவில்லை. மனுதாரர் தரப்பில், அ.ச.3, குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அவருடைய சாட்சியம் ஏற்றுகொள்ளதக்கதல்ல என வாதிடப்பட்டது. அ.ச.3-ன் சாட்சியத்தின் மதிப்பு என்ன? தகுந்த சட்டப்பிரிவின் அடிப்படையில் விளக்குக.

In a trial PW3, Anand was examined in chief, but was not cross examined. Hence his evidence was closed. Later on, an application was filed to recall PW3 and to cross examine him and the same was allowed. Witness summons issued to PW3, Anand, was returned with an endorsement that the said person had died. So he could not be cross examined. During arguments it was submitted on the side of the applicant that the evidence of 'PW3' cannot be considered as he was not subjected to cross examination. What is the evidentiary value of 'PW3's deposition? Discuss based on the relevant section.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## பிரிவு ஈ — (2 × 10 = 20)

## SECTION D — (2 × 10 = 20)

### இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

### CONSTITUTION OF INDIA

19. இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுப்பு 21-ன் கீழ் விவரிக்கப்படும் வாழ்வதற்க்கான உரிமை, இறப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கி உள்ளதா? அண்மையில் வெளிவந்த மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்புகளின் அடிப்படையில் விவாதிக்கவும்.

    Whether Right to Life under Article 21 of the Constitution includes Right to die? Discuss based upon recent citations of the Hon'ble Supreme Court.

20. டி.கே. பாசு எதிர் மேற்குவங்க மாநிலம், AIR 1997 SC 610 என்ற முன் தீர்ப்பில் எடுத்துரைத்துள்ள குற்றம் சாட்டப்பட்டவர்/எதிரியின் உரிமைகள் குறித்து, விரிவாக விவரிக்கவும்.

    Elaborate on the Rights of accused as enumerated in D.K. Basu Vs. State of West Bengal, – AIR 1997 SC 610.

SEAL

TNPSC - SPECIMEN

## பிரிவு உ — (1 × 5 = 5)

## SECTION E — (1 × 5 = 5)

### வாதுரைகள்

### PLEADINGS

21. ஒரு நபர் தீயயெண்ணம் மற்றும் மனச்சாய்வுடன் செயல்படுகிறார் என குற்றஞ்சாட்டப்படும்போது, அந்த நபர் வழக்கின் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவேண்டும். இக்கூற்றினை விரிவாக விளக்குக.

    If Malafides and Bias is pleaded, the party against whom Malafides and Bias is alleged, is to be added as a party. Discuss and explain this statement.

---